(ii) மூலதனத்தில் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் தன்மை மற்றும் அவற்றை பேணித் செல்வதன் நோக்கம் போன்றன தொடர்பில் வெளிப்படுத்தல்கள் அவசியமான போதிலும், கூட்டுத்தாபனத்தினால் பேணிச்செல்லப்படும் மூலதன ஒதுக்கங்கள், பொது ஒதுக்கங்கள், அபிவிருத்தி ஒதுக்கங்கள் போன்றன தொடர்பில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07

(i) முன்னைய ஆண்டின் சீராக்கமான ரூபா 38,327,278 தொகையான மீதி உள்ளடக்கப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்று சமப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் அதன் சரியான தன்மை தொடர்பில் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

- ஆண்டினுள் வருமான வரியாக ரூபா 30,000,000 தொகை கூட்டுத்தாபனத்தினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 25,000,000 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது.

- முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கான காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 37,941,634 ஆக இருக்க வேண்டிய போதிலும், அது ரூபா 36,160,264 ஆக காண்பிக்கப்பட்டமையால் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 1,781,370 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

- வட்டி செலுத்த வேண்டிய கடன் செலுத்தல்களின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான அதிகரிப்பு ரூபா 99,537,720 ஆன போதிலும், அது ரூபா 86,782,343 ஆக காண்பிக்கப்பட்டமையால் நிதி செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 12,755,377 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08

கூட்டுத்தாபனத்தால் முன்னைய ஆண்டுகளுக்குரிய வழுக்களைத் திருத்துதல் பின்னோக்கி சீராக்கம் செய்து முன்னைய ஆண்டின் நிதி நிலையை மீண்டும் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக முன்னைய ஆண்டின் சீராக்கங்களால் இலாபத்திற்கு ஏற்பட்ட ரூபா 73,242,347 தொகையான தாக்கம் மீளாய்வாண்டின் மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் வைத்திருப்பு வருவாயிலிருந்து குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12

வருமான வரி செலவினமாக நடப்பாண்டின் வரி செலவினத்திற்கு முன்னைய ஆண்டிற்குரிய குறை ஒதுக்கீடுகள் / மிகை ஒதுக்கீடுகள் மற்றும் பிற்போடப்பட்ட வரி செலவினம் / வருமானம் இனங்காணப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தின் வரி செலவினமாக நடப்பாண்டின் வரி செலவினம் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆம் ஆண்டிற்குரிய குறை வரி ஒதுக்கீடு ரூபா 11,536,948 ஆக இருந்ததுடன், அதனை கூட்டுத்தாபனத்தின் நிறுத்தி வைக்கப்பட்ட வருமானத்திற்கு வரவு வைத்தமையினால் மீளாய்வாண்டிற்கான வரிக்கு பின்னரான இலாபம் ரூபா 11,536,948 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) பிற்போடப்பட்ட வரியினை கணக்கு வைத்தல் தொடர்பான கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தலினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. விசேட வரி கணிப்பீட்டின் போது எழும் தற்காலிக வேறுபாடுகள் (Temporary Differences) மற்றும் நிரந்தர வேறுபாடுகள் (Permanent Differences) இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

(i) மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்களை மீள்மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்துக்கள் தொகுதிக்குரிய அனைத்து சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 1,420,429 கூட்டுப் பொறுமதியுடைய மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்களை மீள்மதிப்பீடு செய்யப்பட்ட திகதிகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) சொத்துக்களின் மீள்மதிப்பீட்டின் பிரதிபலனாக சொத்துக்களின் கொண்டு செல்லும் பெறுமதியை விட அதிகமாக மீள்மதிப்பீட்டு பெறுமதி அதிகரிக்குமெனின் அந்த அதிகரிப்பு ஏனைய விரிவான வருமானத்தினுள் இனங்காணப்பட வேண்டியதுடன், மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றினுள் "மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்" எனும் பெயரிலான தலைப்பின் கீழ் மீள்மதிப்பீட்டு இலாபம் காண்பிக்கப்பட வேண்டும். எனினும் மோட்டார் வாகனம் மற்றும் ஏனைய வாகனங்களின் மீள்மதிப்பீட்டு இலாபம் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தின் கீழ் இனங்காணப்பட்டிருந்ததுடன், மீள்மதிப்பீட்டு இலாபம் ஏனைய விரிவான வருமானமொன்றாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மொத்த விரிவான வருமானம் ரூபா 36,015,363 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் நிறுத்தி வைக்கப்பட்ட இலாப ஒதுக்கம் அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) நடைமுறையல்லா சொத்துக்களுக்காக பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 183,762,693 தொகையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ள போதிலும், அந்த சொத்துக்களை தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு இருந்தது. அதன் பிரகாரம் எற்பட்ட மதிப்பீட்டு வழுவினை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

ஓய்வூதிய நலன்களை கணக்கு வைத்தல் தொடர்பில் ஓய்வூதிய நலன்களின் திட்டம் தொடர்பான சாதாரணமான விபரமொன்று, ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளின் தற்போதைய பெறுமதிகளை இணக்கம் செய்தல் தொடர்பான விபரம், தற்போதைய சேவைக் கிரயம், உண்மையான வருமானம் அல்லது நட்டம் (Actual Gain or Loss) மற்றும் கடந்த சேவைக் கிரயம் போன்றவற்றின் தகவல்கள் இனங்காணப்பட்டு அதன் இலாபம் அல்லது நட்டம் சீராக்கப்பட்ட முறைமை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இருப்பு அறிக்கைகளின் பிரகாரம், நிலவிய முடிவுப் பொருட்கள் மற்றும் முடிவடையாத பொருட்களின் இருப்பினை விட நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள முடிவடையாத மற்றும் முடிவடைந்த பொருட்களின் இருப்பானது தவறுதலாக ரூபா 15,000,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் அந்த அளவினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தின் அச்சீட்டு நடவடிக்கைகளுக்காக முடிவடைந்த இரண்டு அச்சீட்டு நடவடிக்கைகளின் பட்டியல் பெறுமதியான ரூபா 41,454,000 தொகை வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த அச்சீட்டு பணிகளுக்குரிய அச்சீட்டு கிரயத்தில் ரூபா 966,514 தொகை முடிவடையாத இறுதி இருப்பினுள்ளும், ரூபா 10,898,322 பெறுமதியான 92,117 கிலோ கிராம் எடையுள்ள கடதாசி மூலப்பொருள் இருப்பினுள்ளும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 11,864,836 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) காகிதாதிகள் விற்பனையின் மூலம் பெறப்பட்ட வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி சேர் வரியின் பெறுமதியான ரூபா 31,511,137 தொகையான பணம் காகிதாதி வருமானமாக கருத்திற் கொள்ளப்பட்டமையால், மீளாய்வாண்டின் இலாபம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது பாடப் புத்தகங்களை அச்சிட்டு உடன்படிக்கை திகதிக்கு முன்னர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு கையளிக்காமையால் ரூபா 26,007,297 ஆன தாமத கட்டணங்கள் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்ட போதிலும், அதற்காக கணக்குகளில் ரூபா 3,571,658 தொகை மாத்திரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 82,045,046 கூட்டுத்தொகையான கடன் மீதியொன்றை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்ததுடன், அது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அறவிடப்பட வேண்டிய கடன்பட்டோர் மீதியான ரூபா 703,301,233 இல் 11 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 80,124,336 தொகையான கடன்பட்டோர் மீதியில் 04 வருடங்களை விஞ்சிய தீர்க்கப்படாத கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 11,016,563 அல்லது 14 சதவீதமாகும்.

(இ) மேற்படி (அ) மற்றும் (ஆ) பந்திகளினுள் உள்ளடக்கப்பட்டுள்ள மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக தேசிய கடதாசிக் கம்பனியிலிருந்து அறவிடவேண்டியிருந்த மற்றும் செலுத்தவேண்டிய மீதிகள் முறையே ரூபா 9,753,427 மற்றும் ரூபா 7,460,675 ஆக இருந்தது. இந்த மீதியில் 03 வருடங்களை விஞ்சிய மீதிகள் முறையே ரூபா 7,989,976 மற்றும் ரூபா 5,578,142 ஆக இருந்த போதிலும் அந்த மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்
(அ)	1942 இன் 45 ஆம் இலக்க கைத்தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 59 ஆம் பிரிவு	தீ விபத்து எச்சரிக்கை சமிக்ஞை கட்டமைப்பொன்று நிறுவப்பட்டிராததுடன், தீப்பிடிக்கும் சந்தர்ப்பமொன்றில் அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் முறை மற்றும் அதற்கு முகங்கொடுத்தல் தொடர்பில் போதியளவான பயிற்சியொன்று ஊழியர்களுக்கு

வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை

(i) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.2 ஆம் பிரிவு

குழாம் போக்குவரத்திற்காக உரித்தினை பெறும் கூட்டுத்தாபனத்தின் மத்திய நிலையிலான 14 முகாமையாளர்களுக்காக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக உத்தியோகத்தர் ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 17,500 படியாக 2016 ஒக்தோபர் முதல் திசெம்பர் வரை ரூபா 691,250 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

3.2 ஆம் பிரிவு

உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுவதற்காக மாதாந்த எரிபொருள் படிகள் போதுமானதாக இல்லாதிருக்கும் விசேட சந்தர்ப்பமொன்றில் பணப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட உள்ளபடியான எரிபொருள் செலவினம் மீளளிப்பு செய்யப்பட முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கூட்டுத்தானத்தினால் பொது முகாமையாளரின் மேலதிக எரிபொருள் செலவின அங்கீகாரம் கிடைப்பதற்கு முன்னர் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது.

(ii) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவு

அமைச்சரவையின் அங்கீகாரமின்றி கூட்டுத்தானத்தின் ஊழியர் ஒருவர் அமைச்சிற்கு அல்லது வேறு நிறுவனமொன்றிற்கு விடுவிக்கப்பட கூடாத போதிலும், முகாமைத்துவ பயிலுநர் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் 2008 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து வட மேல் மாகாண சபைக்கு இணைப்பு செய்யப்பட்டிருந்தார்.

(iii)	2016 திசெம்பர் 16 ஆந் திகதிய பீஈடீ/05/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01, 02 மற்றும் 03 ஆம் பிரிவுகள்.	மிகை ஊதியம் செலுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டிற்காக ரூபா 53,029,119 தொகை மிகை ஊதியமாக கூட்டுத்தாபத்தின் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 943,720 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,111,384 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,167,664 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் விற்பனை கிரயம் ரூபா 152,393,746 இனால், பகிர்ந்தளிக்கும் செலவினம் ரூபா 8,761,123 இனால் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 7,007,387 இனால் அதிகரித்தமை மேற்படி நிதி விளைவிலான வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையும் மிகை ஏற்பட்டிருந்த போதிலும், அது 2012 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் சீராகக் குறைவடைந்திருந்தது. எனினும், நிதி விளைவிற்கு ஊழியர் பணிக்கொடை, அரச வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் மீண்டும் சீராக்கும் போது போது 2012 ஆம் ஆண்டில் ரூபா

469,013,635 தொகையான கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் இறுதியில் அது ரூபா 599,107,326 ஆக இருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

1968 இன் 24 ஆம் இலக்க அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டம் மற்றும் அதன் திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பொழிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) அரசாங்கம் உள்ளூராட்சி நிறுவனங்கள், எழுத்துமூல சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், தனியார் நிறுவனங்கள் அல்லது தனிப்பட்டவர்களின் அச்சிடல் அல்லது வெளியீட்டுப் பணிகளை நிறைவேற்றுதல்.

(ii) காகிதாதிகள் மற்றும் ஏனைய தொடர்புடைய பொருட்களை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல் போன்ற பணிகளுக்குப் பொறுப்பான இருத்தல்.

(iii) கூட்டுத்தாபனத்தினால் அல்லது இலங்கையில் ஏனைய நிறுவனங்களினால் அல்லது அச்சிடப்படுகின்ற அல்லது வெளியிடப்படுகின்ற புத்தகங்கள், கல்விசார் உசாத்துணை, செய்திப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனைய வெளியீடுகளின் விற்பனை, பகிர்ந்தளித்தல், ஏற்றுமதி செய்தல் மற்றும் இறக்குமதி செய்தல் ஆகிய பணிகளுக்குப் பொறுப்பாக இருத்தல்.

மீளாய்வாண்டின் போது மேற்படி நோக்கங்களை நிறைவேற்றலின் செயலாற்றல் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் அல்லது இலங்கையில் ஏனைய நிறுவனங்களினால் அல்லது அச்சிடப்படுகின்ற அல்லது வெளியிடப்படுகின்ற புத்தகங்கள், கல்விசார் உசாத்துணை செய்திப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனைய வெளியீடுகளின் விற்பனை, பகிர்ந்தளித்தல், ஏற்றுமதி செய்தல் மற்றும் இறக்குமதி செய்தல் ஆகிய பணிகள் மூலம் 2011 ஆம் ஆண்டு

கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த வருமானத்தில் 0.01 சதவீதம் முதல் 0.08 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தமையால் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் போதியளவில் கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) பாடப் புத்தகங்களை அச்சிடல் மற்றும் லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்காக முறையே கல்வி வெளியீட்டு திணைக்களத்திடமிருந்து மற்றும் தேசிய லொத்தர் சபையிலிருந்து மீளாய்வாண்டினுள் ரூபா 1,090,385,915 தொகையான வருமானம் கிடைத்திருந்ததுடன் அது வருடத்தின் ஒட்டுமொத்த வருமானமான ரூபா 1,477,236,807 இன் 74 சதவீதமாக இருந்தமையால் கூட்டுத்தாபனத்தினால் தமது வருமான மூலங்களை வகைப்படுத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்களுக்காக 23 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 10 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

இரண்டு தனியார் நிறுவனங்களால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம், அந்த நிறுவனங்களுக்கு அறவிடப்பட வேண்டியதாக எந்தவொரு கடன் மீதியும் இல்லாதிருந்தமை குறிப்பிடப்பட்டுள்ள போது கூட்டுத்தாபனத்தினால் அந்த இரண்டு நிறுவனங்களுக்காக ரூபா 1,180,993 கூட்டுத்தொகையான பணம் செலுத்தப்பட வேண்டியுள்ளதாக கணக்குகளில் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிய முறையில் விற்பனை இலக்குகளை அடைந்து கொள்வதற்கு மற்றும் விற்பனை பிரிவின் பணிகளை உரிய முறையில் நிறைவேற்றிக் கொள்வதற்கும் இயலுமான விதத்தில் மீளாய்வாண்டிற்கான விற்பனை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் பண்டக் குறியீடுகளுக்காக (Bar codes) வருடாந்தம் ரூபா 10,000 தொகையான பதிவுக் கட்டணமொன்றினை தனியார்

கம்பனியொன்றிற்கு செலுத்துவதன் மூலம் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்ற பயிற்சி புத்தகங்களின் பண்டக் குறியீடுகள் அச்சிடப்பட்டிருந்த போதிலும், அந்த பண்டக் குறியீடுகளை பயன்படுத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களுக்கு வழங்கப்பட்டிராமையின் காரணத்தால் விற்பனை நடவடிக்கைகளை செயற்திறனாக நிறைவேற்ற முடியாதிருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக 12 விற்பனை நிலையங்கள் காணப்படுவதுடன், அதில் சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணியினருக்காக விற்பனை முகாமைத்துவத்திற்குரிய எந்தவொரு பயிற்சியும் மீளாய்வாண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விற்பனை நிலையங்களின் விற்பனை வருமானத்தை அதிகரித்தலை ஊக்குவிப்பதற்காகவும், ஊழியர்களின் செயற்திறனை அதிகரிப்பதற்கு அவர்களை தூண்டுவதற்காகவும் விற்பனை இலக்குகளை வருடாந்தம் அதிகரிக்கக்கூடிய விதத்தில் (Progressively) கூட்டுதல் நல்லதொரு முகாமைத்துவ அங்கமொன்றான போதிலும், கூட்டுத்தாபனத்தின் ஆறு விற்பனை நிலையங்களுக்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த விற்பனை இலக்குகள் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 1,000,000 இலிருந்து ரூபா 5,500,000 வரை குறைத்து வழங்கப்பட்டிருந்தது.

(உ) போட்டி அடிப்படையிலான சந்தையில் செயற்படும் அரசாங்க அச்சீட்டு கூட்டுத்தாபனத்தினால் தமது பயிற்சி புத்தகங்கள், அச்சிடப்பட்ட நூல்கள் மற்றும் ஏனைய வணிக வெளியீடுகள் தொடர்பில் சந்தை மதிப்பாய்வொன்று மீளாய்வாண்டில் அல்லது அதற்கு முன்னைய வருடங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தில் முன்னைய வருடங்கள் முதல் காணப்பட்ட பத்து விற்பனை நிலையங்களில் ஆறு நிலையங்களும் மீளாய்வாண்டில் இலக்கிடப்பட்ட விற்பனைகளில் 12 சதவீதம் முதல் 65 சதவீதம் வரையான தமது இலக்குகளை அடைந்திருக்கவில்லை. மூன்று விற்பனை நிலையங்கள் 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலும் தொடர்ச்சியாக

நட்டமடைந்திருந்ததுடன், வருடாந்த நட்டம் ரூபா 160,550 முதல் ரூபா 1,556,829 வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) பாடப் புத்தகங்களை அச்சிடும் லிதோ பிரிவிலுள்ள ஐந்து பழமையான இயந்திரங்கள் 2017 ஆம் ஆண்டிற்குரிய பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கான கால எல்லையான 2016 ஆகஸ்ட் முதல் திசெம்பர் மாதம் வரையான ஐந்து மாதங்களினுள் 1999 இயந்திர மணித்தியாலங்கள் உடைந்து விழுந்தமையால் செயலற்று காணப்பட்டதுடன், அதனால் பாடசாலை புத்தகங்களின் அச்சிடல் நடவடிக்கைகளுக்கு தடையேற்பட்டிருந்தது.

4.5 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

முறையான கையளித்தலின்றி கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணியில் 13 ஏக்கர் 2 ரூட் 06 பேர்ச் அளவொன்று கைத்தொழில் பேட்டையொன்றை அமைப்பதற்காக கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் உயர் மற்றும் மத்திய நிலைகளிலான பத்து முகாமையாளர்கள் எதிர்வரும் 03 வருட காலப்பகுதியினுள் ஓய்வு பெற்று செல்வதற்கு நிமித்தமாக உள்ள போதிலும், அந்த பதவிகளுக்கான மாற்றுத் திட்டமொன்று (Succession Plan) கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) போட்டித் தன்மையுடனான அச்சீட்டுத்துறையின் அச்சீட்டு கட்டளைகளை பெற்றுக் கொள்வதற்கும் சந்தை பங்கினை அதிகரித்துக் கொள்வதற்கும் கடமையாற்றும் விற்பனை ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள் 2016 சனவரி 18 ஆந் திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வெற்றிடமாக நிலவியது.

(இ) அங்கீகரிக்கப்படாத அச்சீட்டு உதவி பணியாளர் (Press Aide) பதவிக்காக மீளாய்வாண்டில் 13 ஊழியர்கள் நிரந்தர சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த பதவிகள் உள்ளடங்களாக அங்கீகரிக்கப்படாத கனிஸ்ட பொது உற்பத்தி ஊழியர் பதவிக்காக மீளாய்வாண்டின் இறுதியில் 212 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

5. கணக்களிப்புப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது 29 செலவின விடயங்களில் 20 சதவீதம் முதல் 140 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5.2 ஆண்டறிக்கையை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது வியாபார திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 6.5.3 அம் பிரிவின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலும் கூட்டுத்தாபனத்தின் ஆணடறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமம் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கமைய தயாரித்தல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

2.2 நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

2.2.1 (அ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 01

(i) எதிர்வரும் கணக்குகளில் இத்தவறுகளை திருத்துவதற்கு வழிவகை செய்யப்படும்.

(ii) எதிர்வரும் கணக்கு நடவடிக்கைகளில் தேவையான வெளிப்படுத்தல்கள் முன்வைக்கப்படும்.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 07

(i) கடந்த சில வருடங்களுக்குரிய வருமான வரி VAT, NBT. ESC மற்றும் PAYEE செலுத்தப்படாமலிருந்ததுடன், அவற்றை இவ்வருடத்தில் தீர்த்தமையால் இதனை இணங்கச் செய்த போது பிரச்சினை எழுந்தது. எனினும் இவ்வருடத்தில் கணக்குகளில் சம்பந்தப்பட்ட இணக்கப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையால் எதிர்வரும் வருடங்களில் நிதி பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட்டுள்ளது.

(ii) இறுதி கணக்குகளில் நிதி நிலைமை பற்றிய கூற்றில் அனைத்து வகையான வரிகளின் வரவுகள், உள்நாட்டு வருமான ஆணையாளர் நாயகத்தின் பெயரிலான ஒரே கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்தமையால் இக்குற்றம் இடம்பெற்றுள்ளது. எதிர்காலத்தில் இந்நிலைமையை தடுப்பதற்காக செலுத்திய வரி பெறுமதி சரியாக நிதிப்பாய்ச்சல் கூற்றில் காட்டுவதற்காக கடுமையாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

❖கூட்டுத்தாபன இறுதி கணக்குகள் மற்றும் இதனுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல் அறிக்கைகள் அநேகமானவை Manually மேற்கொள்ளப்படுவதால் இறுதி கணக்குகள் தயாரிக்கப்பட்டு அதன் இலாபத்தை தெரிவிப்பதற்கு நீண்டகாலம் எடுக்கும். கணக்கு கூற்றுக்கள் அடுத்த வருடம் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் திணைக்களத்தில் கையளிக்க வேண்டும். இவ்வாறான நிலையில் வருமான வரிக்காக 100% சரியான ஒதுக்கீட்டை மேற்கொள்ளல் கடினமாவதுடன் இதற்காக குறைந்த பட்சம் ஒதுக்கம் (Provision) மாத்திரம் மேற்கொள்ளப்படும்.

- ❖ சொத்துக்கள் மற்றும் இயந்திரங்கள் குறிப்பில் கூறப்பட்டுள்ள ரூ. 36,160,264/- பெறுமதியான வருடத்தில் நிலையான சொத்து கொள்வனவாக கருதி நிதிப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.
- ❖ 2016.12.31 ஆம் திகதியில் குறுங்கால கடன் கணக்கு மீதியான ரூ. 569,351,345.71/- மீதி நிதிப்பாய்ச்சல் கூற்றுக்கு சரியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 08

இங்கு அநேகமான சீராக்கல்கள் 2014ஆம் வருடம் அல்லது அதற்கு முந்திய வருடங்களின் சீராக்கல் என்பதால் உரித்து மாற்றங்கள் கூற்றில் முந்திய வருடங்களில் இலாப/நட்டங்களுக்கு இணக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வதற்கு நியமம் இடமளித்துள்ளது.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 08

(i) 2015 ஆம் ஆண்டில் இதற்காக பெறுமதியளவிலான மாற்றங்கள் மேற்கொள்ளப்படாத போதிலும் அதாவது இந்த 2016 நிதியாண்டில் அந்த சரியான முறையியலுக்கு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ii) கூட்டுத்தாபன இறுதி கணக்குகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல் அறிக்கைகள் அநேகமானவை Manually மேற்கொள்ளப்படுவதால் இறுதி கணக்குகள் தயாரித்து அதன் இலாபத்தை தெரிவிப்பதற்கு நீண்டகாலம் செல்லும். நிதிக்கூற்றுக்கள் அடுத்த ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் திணைக்களத்திடம் கையளிக்கப்பட வேண்டும். அவ்வாறான நிலையில் வருமான வரிக்கான 100% சரியான ஒதுக்கீட்டை மேற்கொள்ளல் கடினமாவதுடன் இதற்காக குறைந்த பட்சம் ஒதுக்கம் (Provision) மாத்திரம் மேற்கொள்ளப்படும்.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 16

(i) மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய அனைத்து வாகனங்களையும் மீள் மதிப்பீடு செய்து அதன் மீள் மதிப்பீடு பெறுமதி காட்டப்பட்டுள்ளது. சைக்கிள் மற்றும் தள்ளுவண்டி ஆகியவற்றுக்கு வாங்கப்படும் அநேகமான பாகங்கள் பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளமையால்/பாவனைக்கு எடுக்காமையினால் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி நியாயமானதென்பதால் காலம் மற்றும் அதன் பெறுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

(ii) மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட திகதி ஜனவரி மாதம் 13 திகதியாகும்.

(iii) மீள்மதிப்பீட்டு இலாபம் தெளிவாக தனியொரு தலைப்பின் கீழ் இனம் காண்பதற்கு இலகுவான வகையில் காட்டப்பட்டுள்ளது.

(iv) அனைத்து சொத்துக்களும் தற்சமயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவ்வறிக்கைகளை பெற்றுக்கொள்வதில் தாமதம் காணப்பட்டது. இதற்காக 02 மில்லியனுக்கு அதிகமான செலவினம் ஏற்படும்.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 19

எதிர்வரும் நிதியாண்டுகளில் இவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) இறுதி கையிருப்பை கணக்கிடுவதில் குறைபாடுகள்

இறுதி கணக்குகளை தயாரிப்பதற்கு கிரய பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை பேரேட்டு கணக்கு பிரிவின் தகவலுடன் ஒப்பிடப்பட்ட போது அவற்றில் குறைபாடு உள்ளதென அவதானிக்கப்பட்டமையால் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டது. கிரய பிரிவு பிரதி நிதி முகாமையாளரின் பொறுப்பில் இருந்ததுடன் 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இவர் ஓய்வில் சென்றமையால் டிசம்பர் 31 திகதி தயாரிக்கப்பட்ட அறிக்கைகளின் குறைபாடுகள் சீராக்கப்பட்டு முடிவு அல்லாத கையிருப்பு பெறுமதிகள் கணக்கிடப்பட்டன.

(ஆ) வேலை இலக்கம் 160353 மற்றும் 160370 க்காக பாடசாலை புத்தகங்கள் அச்சிடப்பட்டு பற்றுச்சீட்டு இடப்பட்டிருந்த போதிலும் மூலப்பொருட்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பிலான விபரங்கள் கிரய பிரிவிற்கு சரியாக அனுப்பாமையினால் இது நடந்துள்ளது. எனினும் இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் ஏற்படாமலிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) காகிதாதிகள் விற்பனையில் வாடிக்கையாளருக்கு தனியே Tax பற்றுச்சீட்டு வெளியிடப்படமாட்டாது. இதற்கு அமைவாக எமது வாடிக்கையாளர்கள் Vat ஆக தனியே ஒரு தொகை அறவிடப்பட்டு அல்லது அது பற்றுச்சீட்டில் காட்டப்படவில்லை. எனவே அதன் மொத்த வருமானமும் கூட்டுத்தாபன ஆரம்பத்திலிருந்து கூட்டுத்தாபன எழுதுபொருள் வருமானமாக கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எழுதுபொருளுக்காக உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு வற் வரி செலுத்தப்பட வேண்டியதுடன், தனியே கணக்குப் பார்த்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மாற்றப்படும்.

(ஈ) கடந்த காலத்தில் கூட்டுத்தாபனத்தில் நிலவிய நிதி பிரச்சினை காரணமாக மூலப்பொருள் இறக்குமதி தாமதத்திற்கு முகம்கொடுக்க வேண்டியேற்பட்டதுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை வரி பணத்தை செலுத்த நேர்ந்தமையால் எமது வங்கி கணக்குகள் தற்காலிகமாக நிறுத்தப்பட வேண்டியேற்பட்டது. இதனால் கடன் பத்திரங்களை திறப்பதற்கு தாமதம் ஏற்பட்டது. இதனால் எமது முக்கிய மூலப்பொருளான இறக்குமதி கடதாசி மற்றும் ஏனைய மூலப்பொருட்கள் திட்டமிட்டப்படி கிடைக்கவில்லை.

மேற்படி விடயம் பற்றி கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்திற்கு தெளிவுபடுத்தப்பட்டு கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டமையால் தண்டப்பணம் அறவிடப்படமாட்டாதென எதிர்ப்பார்த்திருந்தமையால் தாமதக்கட்டணத்திற்கான ஏற்பாடுகள் கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை.

2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 5993 காக வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு ஏற்ப கடன் பெற்றுக்கொடுக்கும் பொது காலவரையறை முறைப்படுத்தப்பட்டுள்ளது. கடன் கால வரையறை தாண்டிய கடன்பட்டோருக்கான பண அறவீட்டுக்கு கணக்காளர் (வருமானம்) தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் பழைய கடன்கொடுத்தோர் பற்றி ஆராய்ந்து உண்மையாக செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் நிலுவை பற்றி சில தவணைகளில் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(இ) இது பற்றி 2016.06.03 ஆம் திகதி பொது முகாமையாளரின் கையொப்பத்தில் அமைச்சின் செயலாளருக்கும் பிரதியொன்றுடன் அன்றைய திகதிக்கு எமக்கு அனுப்பி வைக்க வேண்டிய மீதியான ரூ. 2,292,752.26 தீர்க்குமாறு கடிதம் அனுப்பப்பட்டதுடன், இதற்கு இதுவரையில் எவ்வித பதிலும் கிடையாது. இம்மீதி கீழ்வருமாறு அமையும்.

தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்திடம் அறிவிட வேண்டிய	- ரூ. 9,753,427.00
தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய	- ரூ. (7,460,675.00)
தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்திடம் அறிவிட வேண்டிய தேறிய மீதி	- ரூ. 2,292,752.00

2.4 சட்டங்கள், ஒழுங்குவிதிகள், நிபந்தனைகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பொருந்தாமை

(அ) தீயணைக்கும் உபகரணங்கள் கடந்த ஆண்டில் பரிசோதிக்கப்பட்டதாக பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தரால் உறுதி செய்யப்பட்டதுடன் மேலும் எதிர்காலத்தில் அவற்றை இற்றைவரைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எச்சரிக்கை சமிக்ஞை குழல் முன்னர் பொருத்தப்பட்டிருந்த போதிலும் அது இன்னும் புதுப்பிக்கப்படவில்லையென்பதுடன் மேலும் அவற்றை ஆராய்ந்து சீராக்குவதற்கு பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தீயணைக்கும் உபகரணங்களின் பாவனை மற்றும் பாதுகாப்பு பற்றிய பயிற்சியொன்று அண்மையில் மேற்கொள்ளப்படவில்லையென்பதுடன், எதிர்காலத்தில் அதற்கு தேவையான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு எழுத்துமூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) i **4.2 பிரிவு**

கூட்டுத்தாபனத்தின் நடுத்தர மட்ட முகாமையாளர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமையானது எமது நிறுவனம் அரச வணிக நிறுவனமென்பதாலும்

கொழும்புக்கு வெளியே அமையப்பெற்றிருப்பதாலும் மற்றும் உரிய உத்தியோகத்தர்கள் சரியான நேரத்திற்கு கடமையில் ஈடுபடுத்த வேண்டுமென்ற விடயங்களை கருத்தில் கொண்டாகும்.

இந்த உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு பிரதேசங்களில் வசிப்பதால் கூட்டுத்தாபனத்தின் 04 வாகனங்களை பயன்படுத்தி குழு போக்குவரத்து வசதிகளை வழங்குதல் குறுகிய காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டதுடன், அநேகமான உத்தியோகத்தர்கள் உரிய நேரத்தை விட தாமதமாக கடமைக்கு சமூகமளித்துள்ளனர். எனவே உரிய உற்பத்தி பிரிவுகளில் கடமைகளை உரிய நேரத்திற்கு ஆரம்பிக்க முடியாமையால் நிறுவனத்தின் உற்பத்தி செயன்முறைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், நிறுவனத்தின் வளர்ச்சியை கருத்திற்கொண்டு பணிப்பாளர் சபையின் இணக்கப்பாட்டின் அமைச்சின் ஊடாக திறைசேரியின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3.2 பிரிவு

பொது முகாமையாளர் கடமையை நிறைவேற்றும் போது மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு போதாத சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளும் மேலதிக எரிபொருளுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பின் மேலதிக எரிபொருளுக்கான செலவுகள் மீள்நிரப்பப்படும். இது 2017 மார்ச் மாதம் முதல் மேற்கொள்ளப்படுகிறது.

ii முகாமைத்துவ பயிலுணர் பதவி வகிக்கும் திரு அதிகாரி நீண்ட காலம் கூட்டுத்தாபன சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டு வேறொரு நிறுவனத்தில் சேவையாற்றுவதால் அப்பதவியை வகிக்கும் நீண்டகாலம் நிறுவனத்தில் சேவையாற்றாமையினால் கூட்டுத்தாபனத்திற்கு தேவையான பதவியென கருதி நடவடிக்கை எடுப்பதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (இப்பதவி புதிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு படிமுறையிலிருந்து நீக்கப்பட்டுள்ளது)

iii 2016 ஆண்டில் பாடசாலை பாடபுத்தகங்கள் உற்பத்தி செயற்பாட்டில் எஞ்சியவை கழிவுகளாக கருதப்பட்டு நீக்கப்பட்ட நிரல் கடதாசி விற்பனையால் பெற்ற மேலதிக வருமானமும், ஊழியர்களை ஊக்குவிப்பதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் 2016.12.19 ஆம் திகதி தவிசாளரின் எழுத்து மூல அறிவித்தலின் படி 2016.12.28 ஆம் திகதி கடந்த ஆண்டின் படி போனஸ் கொடுப்பனவு செலுத்தப்பட்டது. அதன் பின்னர் 2017.01.27 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு உரிய சுற்றறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி பெறுபேறுகள்

கவனம் செலுத்தப்பட்டுள்ளது

4. தொழிற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

(அ) கவனம் செலுத்தப்படும்.

(ஆ) கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது

(இ) 2016 ஆண்டில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 10 ஆக இருந்த போதிலும் சகல ஊழியர்களின் எண்ணிக்கையை நோக்காகக் கொண்டு எண்ணக்கரு ரீதியிலான விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விற்பனை பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், இதற்காக முறையே 221 மற்றும் 30 பேர் கலந்துகொண்டனர்.

4.2 முரண்பாட்டுக்கு ஏதுவான விடயங்கள்

i J. D. C. Graphics System மற்றும் J. D. C. Printing Technologies (pvt) ஆகிய நிறுவனங்கள் இரண்டும் ஒரே குழுமத்திற்கு உரிமையான இரண்டு நிறுவனங்களாகும். ஒரே வர்த்தக இடத்தில் அமைந்துள்ளன. ரூ. 1,175,623.00 J. D. C. Printing Technologies க்கு செலுத்த வேண்டியுள்ளது. இதற்காக 2017 ஆம் ஆண்டு தொடக்கம் தனியொரு பேரேட்டு கணக்கு பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ii Sky Line Trading நிறுவனத்திற்கென எமது கணக்கு புத்தகங்களில் 2011 ஆண்டுக்காக ரூ. 5370.00 நிலுவை செலுத்தப்படவிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இந்த மீதி உறுதிப்படுத்துதலை அடிப்படையாக கொண்டு தேவையான சீராக்கல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.3 செயலிழந்த குறை பயன்பாடுள்ள சொத்துக்கள்

(அ) 2017 ஆண்டில் இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) போட்டித்தன்மையான உற்பத்திகள் மத்தியில் சந்தையின் போட்டித்தன்மைக்கு முகம்கொடுக்கும் தேவைக்காக Bar Code பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் கூட்டுத்தாபனத்தினால் ERP கட்டமைப்பொன்று கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அக்கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் தேவையான உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கு ஆற்றல் காணப்பட்டது. எனினும் எதிர்காலத்தில் பாதுகாப்பு பிரிவின் நடவடிக்கைகளுக்காக புதிய அச்சு இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்படவிருப்பதால் அப்பிரிவில் பயன்படுத்தப்படும் Scanner இயந்திரம் விடுவிக்கப்படுவதுடன் அதற்கு இணைவாக அடிப்படை மென்பொருள் கட்டமைப்பொன்றை செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் இந்த பார்கோட் பயன்படுத்த முடியும்.

(இ) எதிர்காலத்தில் விற்பனை முகாமைத்துவம் பற்றிய பயிற்சி பெற்றுக்கொடுக்கப்படும்.

(ஈ) வருடாந்த விற்பனை இலக்குகளை அடையும் போது சராசரியாக விற்பனை நிலையமொன்றின் செலவினங்களை உள்ளடக்கும் வகையில் புள்ளிவிபரங்கள் தயாரிக்கப்பட்ட போதும் அதற்காக கடந்த ஆண்டில் விற்பனை நடைபெற்ற விதம் மற்றும் இந்த ஆண்டின் உற்பத்தி பிரிவுடன் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிவிபரங்களுடன் தயாரிக்கப்படும். இது பற்றி கவனம் செலுத்தப்பட்டு தயாரிக்கப்பட்ட இலக்குகள் 2016 ஆண்டில் கடந்த வருடத்துடன் ஒப்பீட்டளவில் மாற்றங்களுடன் விற்பனை நிலையங்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. அந்த இலக்குகளை பெற்றுக்கொடுக்கும் போது 2016 ஆண்டின் விற்பனை நிலையங்களுக்கு அந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு இருக்கும் ஆற்றல் பற்றி விசேட கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன் நிறைவேற்ற முடியாத கடினமான இலக்குகளை பெற்றுக்கொடுப்பதன் மூலம் எதிர்பார்த்த விற்பனை தொடர்பில் ஆரம்பம் தொடக்கம் குறித்த ஊழியர்கள் மந்தகதியில் செயற்படுவதை தடுப்பதற்காக நடைமுறையில் ஆற்றக்கூடிய நிலைமை பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தற்சமயம் அந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கும், அதன் பின்னர் தேவையான வசதிகளை பெற்றுக்கொடுத்து முறையாக விற்பனை இலக்குகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) எதிர்காலத்தில் இது தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

4.4 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

(அ) கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

(ஆ) கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

4.5 வேறு அரச நிறுவனங்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

தொழில்நுட்ப அபிவிருத்தி சபை அரச நிறுவனமென்பதால் தற்போது இரண்டு நிறுவனங்களும் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி முறையாக ஒப்படைப்பதற்கு தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

4.6 (அ) தற்சமயம் உயர் பதவிகளை வகிக்கின்ற அநேகமான உத்தியோகத்தர்கள் அப்போதைய காலத்தில் பயிலுணர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்டு பயிற்சி பெற்றதுடன் அல்லது பின்வரும் பதவிகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டு சிறப்பான நிலையை அடைந்துள்ள உத்தியோகத்தர்களாக பதவியுயர்வு பெற்றவர்கள் என்பதுடன், எதிர்காலத்தில் ஏற்படும்

வெற்றிடங்களுக்கும் தகைமை பெறும் உத்தியோகத்தர்களும் இவர்களில் இருப்பதாக தெளிவாகின்றது. தற்சமயம் பயிலுணர் பதவி அல்லாத போதும் உதவி அத்தியட்சகர், நிலைய பொறுப்பதிகாரி முதலிய பட்டதாரி உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு பயிற்றுவிக்கப்படுகின்றனர். எனினும் உயர் பதவிகளை வகிப்பதற்கும் பொறுப்பை ஏற்பதற்கும் பயிற்றுவிக்க முடிவதுடன், அனுபவத்தை பெற்றுக்கொள்வதற்கேற்ப வெற்றிடங்களை நிரப்ப முடியும். எனினும் ஊழியர்களை சேர்த்துக்கொள்ளும் படிமுறையின் அனுமதிக்கேற்ப பகிரங்க விளம்பரங்களை பிரசுரித்து அல்லது புறம்பாக பதவிக்கு தகுதியான ஒருவரை நியமிக்க முடியும். எனினும் கனிஷ்ட மற்றும் மத்திய மட்டத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட முகாமையாளர்கள் தகைமையின் அடிப்படையில் பதவியுயர்வு செய்வதன் மூலம் வெற்றிடங்களை நிரப்ப முடியும்.

(ஆ) சந்தை ஆய்வுக்காக விற்பனை ஆய்வு உத்தியோகத்தர் ஒருவரின் தலைமையில் ஆய்வு செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அந்த ஊழியர் விலகிச் சென்ற பின்னர் அச்செயற்பாடுகள் நடைபெறவில்லை. எனினும் சிற்சில அத்தியவசிய செயற்பாடுகளுக்காக அவ்வப்போது சந்தை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கூட்டுத்தாபன உற்பத்திகள் பற்றி தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அந்த ஆய்வு அறிக்கைகள் பயன்படுத்தப்படும்.

(இ) பாடசாலை புத்தக அச்சிடல் காலத்தில் அந்த அச்சு நடவடிக்கைகளை தாமதமின்றி உற்பத்தி செய்வதற்காக Unskilled worker தற்காலிகமாக இதுவரையில் வெளியிலிருந்து பெறப்பட்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு உற்பத்தி கூடங்களில் இயந்திர உபகரணங்களுக்கு கிடைக்கும் அச்சுப் பணிகளுக்கான கட்டளை கொள்ளளவிற்கு ஏற்ப Unskilled worker காலவாரியாக மாற்றங்களுக்கு உட்படுத்தப்படும்.

எனவே இனம் காணப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப ஒப்பந்த அடிப்படையிலும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியேற்பட்டதுடன், இதற்காக பணிப்பாளர் சபைக்கு அறிவுறுத்தப்பட்டதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கவனிக்க வேண்டியது

அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 138 Unskilled worker பதவிகள் உள்ளன. இப்பகுதியில் ஊழியர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப அச்சிடல் செயற்பாட்டு உதவியாளராக பதவி குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் பதவிக்கு உரிய கடமைகள் மாற்றப்படவில்லை. இந்த பெயரளவிலான மாற்றம் செய்யப்பட்டமையானது பணிப்பாளர் சபை அறிவுறுத்தப்பட்டுள்ளது. கனிஷ்ட பொது உற்பத்தி உதவியாளர் பதவி (Junior General Production Assistant) பதவி 2012.07.02 திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டமையானது தற்போதுள்ள ஊழியர்களுக்கு மாத்திரம் பிரத்தியேகமாகும் வகையில் என்பதுடன் இவர்கள் ஓய்வு பெறுவதால், இராஜினாமா செய்வதனால் அல்லது மரணமடைவதால் இப்பதவி இரத்தாகிவிடும்.

(இ) (இங்கு பதில் அல்லது கேள்விகள் இவ்வறிக்கையில் கிடையாது)

5. கணக்கீட்டு பணிகளும் நல்லாட்சியும்

5.1 வரவு செலவு ஆவண கட்டுப்பாடு

தற்சமயம் மாதாந்த செலவினங்கள் பணிப்பாளர் சபை பத்திரத்தின் ஊடாக, பணிப்பாளர் சபைக்கும் அறிவுறுத்தப்பட்டதன் ஊடாக மதிப்பீடு செய்யப்படுவதுடன் இதற்கு அமைவாக எதிர்காலத்தில் வரவு செலவு ஆவணம் பயனுறுதியான முகாமைத்துவ கருவியாக பயன்படுத்த முடியும்.

5.2 ஆண்டறிக்கைகளை ஆற்றுப்படுத்தல்

2013 மற்றும் 2014 ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கைகள் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். 2015 ஆண்டறிக்கை அச்சுப் பணியில் இருப்பதால் சில வாரங்களுக்குள் அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அனுப்பப்படும்.

6. கட்டமைப்பும் கட்டுப்பாடும்

கவனம் செலுத்தப்படும்.

